CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீட வரலாறு

சக்திதாசன் - ஜுலஜா

மகா சந்நிதானம்



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிர்ங்கேரி ஸ்ரீ சாரதா பீட வரலாறு

அமரர் சக்திதாசன் சுப்பிரமணியன்
ஜலஜா சக்திதாசன் எம்.ஏ. எம்.எட்.,
சங்கீத சிரோமணி

வெளியீடு
ஸ்ரீ சிர்ங்கேரி ஸ்ரீ சாரதா டிரஸ்ட்,
சிர்ங்கேரி - கர்நாடக ராஜ்யம்

விலை ரூ. -00

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

முதல் பதிப்பு 1965
இரண்டாம் பதிப்பு 1977
மூன்றும் பதிப்பு 1980
நான்காம் பதிப்பு 1982
ஐந்தாம் பதிப்பு 1986
ஆறும் பதிப்பு 1987

© ஸ்ரீ சிர்ங்கேரி சமஸ்தானத்துக்கே

1987

அச்சிட்டோர் :
மெர்க்குரி பிரிண்டர்ஸ், சென்னை-600 004

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

முன்னுரை - 1965

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து ஐந்தாம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 2-ந் தேதி பிற்பகல் தியாகராய நகர் சென்றேன் நான். எனது நண்பர் உபந்நியாச கேசரி ஸ்ரீ சாரதா பீடம் தர்மப் பிரசாரக ஆஸ்தான வித்வான் கல்லிடைக்குறிச்சி ஸ்ரீ ராமகிருஷ்ண சாஸ்திரி அவர்கள், ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பள்ளிக்கூடத்துக்கு அருகில் நின்று கொண்டிருந்தார். இவர் எனது கல்லூரித் தோழர். திருவையாற்று அரசர் கல்லூரியிலே இவர் சாகித்ய சிரோமணி பயின்றார்; நான் தமிழ் வித்வான் பயின்றேன். அவர் பள்ளி ஆசிரியர் ஆனார். நான் பத்திரிகை ஆசிரியர் ஆனேன். நாங்கள் இருவரும் சென்னையில் வசிக்கத் தொடங்கிய பின் அடிக்கடி சந்திப்போம். அந்த முறையில் அன்று அவரைக் கண்டவுடன் வணங்கினேன். அவர் என்னை அழைத்தார். இருவரும் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அவர் சிர்ங்கேரி ஜகத்குரு அவர்களின் படங்கள் சிலவற்றைக் காட்டினார். ''இவற்றுள் ஏதாவது ஒன்றை நீ எடுத்துக் கொள்'' என்றார். குருபரம்பரை படத்தை எடுத்தேன். அவர் அதை எனக்குக் கொடுத்துவிட்டார். படத்துடன் வீடு சேர்ந்தேன்; எனது துணைவிக்குக் காட்டினேன். மேஜைமீது படத்தை வைத்தேன்; மலர் தூவி கற்பூர ஆரத்தி எடுத்தேன். இருவரும் வணங்கினோம். சிர்ங்கேரி பீட வரலாறு பற்றி எனது மனைவிக்குக் கூறிக்கொண்டிருந்தேன். அப்போது சினிமாவில் காண்பது போல ஒரு தோற்றம் ஏற்பட்டது என் மனைவிக்கு. சந்நியாசி ஒருவர் காவி உடையில் காட்சி அளித்தார். எவரோ சந்நியாசி என்றுதான் தெரிந்தது. எவர் என்று சொல்ல முடியவில்லை. மறுநாள் நாங்கள் இருவரும் சிர்ங்கேரி ஜகத்குரு அவர்கள் தங்கியிருந்த இடம் சென்றோம். பூஜை காண. அப்போது அங்கே ஸ்ரீ ஜகத்குரு அவர்களைக் கண்ட உடனே ''இவர்தான்; இவர்தான்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நேற்றுத் தோற்றமளித்தவர் இவரேதான்!'' என்றார் எனது மனைவி. நாங்கள் பெரு மகிழ்ச்சி கொண்டோம். தர்பார் தரிசனமும் செய்துகொண்டு, வீடு திரும்பினோம். பிறகு தினமும் எங்கள் மனம் அங்கேயே சுற்றியது. கால்கள் அவ்விடத்துக்கே விரைந்தன. வேறு எதன் மீதும் நாட்டம் செல்லவில்லை.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னர் அவன் பேரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
நங்கை தலைப்பட்டாள் தலைவன் தாளே.

என்ற பதிகம் எங்கள் நெஞ்சில் தோய்ந்தது. மகா சந்நிதானம் அவர்களிடம் பேச துடித்தது உள்ளம். முயற்சி செய்தோம்... .....ஸ்ரீ சிர்ங்கேரி சாரதாபீடம் பற்றி ஒரு சிறு நூல் வெளியிட எண்ணினோம். எங்கள் கருத்தை மகா சந்நிதானம் அவர்கள் முன் வெளியிட்டோம். அருள் சுரந்தார்கள்.

நூல் எளிய முறையில் இருக்கவேண்டும். எல்லாருடைய கண்ணையும் கருத்தையும் கவர்வதாக விளங்க வேண்டும். சில நிமிடங்களில் படித்துவிடக் கூடியதாகவும் அமைய வேண்டும். இந்த நோக்கத்துடன் மாதிரி ஒன்று தயார் செய்தோம். மகா சந்நிதானம் அவர்கள், மாதிரிப் பிரதியில் கண்ட தலைப்புகளையும், பிறவற்றையும் விவரிக்கச்சொல்லிக் கேட்டருளினார்கள். விரைவில் நூலை வெளியிடுமாறு உத்தரவிட்டார்கள். —1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ந் தேதி வெளிவந்த எங்கள் சிறு புத்தகத்தின் முன்னுரையிலிருந்து எடுக்கப்பட்டது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பின்னுரை – 1977

ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்தி ஐந்துக்குப் பின் —பன்னிரண்டு ஆண்டுகள் உருண்டு ஓடிவிட்டன. இப் பொழுது 1977 டிசம்பர்.

இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளில் மகா சந்நிதானம் அவர்கள் எங்கள்பால் பொழிந்துள்ள கருணைக்கு அளவே யில்லை. நாங்கள் வாடியபோதெல்லாம் அவர்கள் அருள்மாரி பொழிந்தார்கள். எங்கள் வாழ்வு தளிர்விட்டது.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய், மலராய் மணியாய், ஒளியாய்க்
கருவாய், உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே !

என்ற அருணகிரியார் தம் அநுபூதிக்கு ஏற்ப எங்களைத் தடுத்தாட்கொண்ட அந்த தயாமூர்த்தி — அருட்பெரும் ஜோதி — தனிப்பெரும் கருணை — அவர்களது செயலை என்ன என்று சொல்வேன் !

குருவாய் வந்த—எங்களை ஆட்கொண்ட அந்தக் கருணை யம் ஜோதியின் அறுபதாண்டு விழா கோலாகலமாக நடை பெறுகிறது.

இச்சமயத்தில் எங்கள் நன்றிக் காணிக்கையை செலுத்த விரும்பினோம்.

1965-ல் வெளியிட்ட நூலைவிட அதிக ஆழமுள்ளதாக வும், பொருள் செறிந்ததாகவும், திருத்தமாகவும் இச்சிறு புத்தகத்தை வெளியிட விரும்பினோம். எங்கள் கருத்து மகா சந்நிதானம் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. மகா சந்நி தானம் அவர்கள் அருள் சுரந்தார்கள். அவர்களுடைய பரமானுக்கிரகம் பெற்று இச்சிறு புத்தகத்தை வெளியிடு கிறோம். மகா சந்நிதானம் அவர்கள் செந்தாமரை மலர்த் திருவடிகளில் இதை சமர்ப்பிக்கிறோம்.

சக்திதாசன் சுப்பிரமணியன்
ஜலஜா சக்திதாசன் எம். ஏ. பி. டி.
சங்கீத சிரோமணி

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சமர்ப்பணம்

1986-சிறப்புமிக்க ஆண்டு. மக்களுக்கு ஞான ஒளி அருளும் மகா சந்நிதானத்தின் எழுபதாவது வர்தந்தி கோலாகலமாகக் கொண்டாடப்படும் சமயம்; அருள் வடிவான சிர்ங்கேரி பீடத்தின் முப்பந்தைந்தாவது பீடாதிபதி ஆகிய மகா சந்நிதானத்தின் வர்தந்தியில் பக்தர்கள் காணிக்கை செலுத்தினார்கள். நானும் என்னாலியன்ற காணிக்கையைச் செலுத்தினேன். ஆனால், என்னுள் ஒரு குரல். "இது மட்டுந்தானா?" என்ற கேள்வியை எழுப்பியது, ஆம்! அன்னை சாரதை கலைமகளின் சொரூபம்; அவளுடைய வியாச்கியான சிம்மாசனத்தின் அதிபதி மகா சந்நிதானம். அவர் தட்சிணாமூர்த்தியின் அவதாரம். அவருக்கு நிதி மட்டும் ஏற்ற காணிக்கையாகுமா? இக் கேள்விக்கு விடையும் கிடைத்தது. அன்னை சாரதையின் அருட் பிச்சையே எனக் கிந்த எழுத்தாற்றல் கொடுத்தது. இந்த ஆற்றலையே அன்னை தனக்கு அர்ப்பணம் செய்ய ஆணையிடுகிறாள். இத்தெளிவு ஏற்பட்டதும், மகா சந்நிதானம் அவர்களின் அருளை வேண்டினேன். மகா சந்நிதானம் அவர்களின் பரமானுக்கிரகம் கிடைத்தது. அன்னை என்னைக் கருவி யாக்கினாள். 'சிர்ங்கேரி பீட வரலாறு' என்ற இச் சிறு நூலை இன்னும் சிறப்பாக வெளியிட வேண்டும் என்று திருவுளங் கொண்டாள். அவ்வாறே இந்நூலை 1986 ஆண்டு விரிவுபடுத்த வைத்தாள்.

ஐந்தாம் பதிப்பு வந்த சில மாதங்களுக்குள் ஆரும் பதிப்பையும் வெளியிட செய்தாள். அவள் அருளுக்கு என்னைப் பாத்திரமாக்கிய மகா சந்நிதானம் அவர்களின் தாமரைத் திருவடிகளில், இந்நூலின் ஆரும் பதிப்பை சமர்ப்பிக்கிறேன்.

ஜலஜா சக்திதாசன்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிர்ங்கேரியும் சூழ்நிலையும்

நமது தேசத்தின் புண்ணிய நதிகளில் ஒன்று துங்கை, துங்கை என்னும் ஆறு, பத்திரை என்னும் மற்றோர் ஆறுடன் கலந்து துங்கபத்திரையாகிறது. துங்கை நதி, கர்நாடக ராஜ்யத்தின் வட பகுதியில் உள்ள வராக மலையில் உற்பத்தி ஆகிறது; வடகிழக்கு நோக்கிச் சிறிது தூரம் ஓடுகிறது. பின்னே மேற்கு நோக்கித் திரும்புகிறது. அப்பால் கிழக்கு நோக்கிச் சென்று பத்திரையுடன் கலக்கிறது.

இவ்வாறு துங்கை நதி சுற்றிவந்து கொஞ்சும் இடத்திலே குன்றுகள் சூழப்பெற்று விளங்குகிறது சிர்ங்கேரி. இயற்கை எழில் பூத்துக் குலுங்கும் இடம். மோனத் தவ முனிவர்க்கு ஏற்ற இடம்; உள்ளம் கொள்ளை கொள்ளும் இடம்.

சிர்ங்க கிரி என்பதே சிர்ங்கேரி என்று வழங்கப்படுகிறது. சிர்ங்க கிரி என்பதன் பொருள் என்ன? சிர்ங்கரது மலை என்பதே. சிர்ங்கர் யார்?

ராமாயணத்தை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். தசரத சக்கரவர்த்தி புத்திரப் பேறு இல்லாமல் வருந்தினார். புத்திரப் பேறு வேண்டி, புத்திர காமேஷ்டி யாகம் செய்தார். அந்த யாகத்தை நடத்திக் கொடுத்தவர் ரிசிய சிர்ங்கர் என்ற மகரிஷி. ரிசிய சிர்ங்கர் என்றால் மான்கொம்பு உடையவர் என்று பொருள். கலைக்கோட்டு மாமுனி என்று இவரைக் கம்பர் குறிப்பிடுகிறார். கலை என்றால் மான். கோடு என்றால் கொம்பு. மான்கொம்பு முனிவர் என்பது இதன் பொருள்.

இந்த முனிவர் விபாந்தகர் என்ற முனிவரின் புதல்வர். கள்ளம் கபடம் இல்லாதவர்; காமம் இன்னது என்று அறியாதவர். இத்தகைய சீரியர் வாழ்ந்து தவம் செய்த இடமே சிர்ங்கேரி.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சங்கரர்க்கு முன்பு

இந்து என்று நம்மை அழைக்கிறார்கள். இந்து மதம் என்று நமது மதத்தைச் சொல்கிறார்கள். நாமும அதையே ஏற்றுக்கொண்டு அப்படியே வழங்குகிறோம்.

உண்மை என்ன? இந்து மதம் என்று ஓர் மதம் உண்டா? இந்து என்று ஓர் இனம் உண்டா? இல்லை; இல்லை. இந்து என்று ஓர் இனமும் இல்லை; இந்து மதம் என்று ஒரு மதமும் இல்லை.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு வந்த கிரேக்கர்கள் நம்மை இந்தப் பெயர் கொண்டு அழைத்தார்கள். சிந்து நதிக்கு அப்பால் இருந்தார்கள் அவர்கள். இப்பால் இருந்த மககளை 'சிநது சிந்து' என்று அழைத்தார்கள். 'சிந்து சிந்து' என்ற பெயர் நாளடைவில் ''ஹிந்து ஹிந்து'' என்று வழங்க லாயிற்று. இன்றளவும் நாம் அதையே சொல்லிக் கொண்டு இருக்கிறோம்.

அப்படியானல் நாம் யார்? நமது மதம் யாது? நாம் எல்லாரும் வேதாந்திகள். நமது மதம் வைதிக மதம், வேதாந்தமே நமது மதம்.

வேதாந்தி, வைதிகன் என்பதன் பொருள் என்ன? வேதாந்தி என்றால் வேத வாக்கினை ஏற்றுக்கொள்பவன் என்பதே பொருள். வைதிகள் என்றால் வேதம் காட்டும் பாதையில் நடப்பவன் என்று பொருள். எனவே, இந்து என்று கூறும்போது இந்தப் பொருவில்தான் நாம் அச்சொல்லை வழங்குகிறோம்.

இவ்விதம் வேதநெறி பற்றி வாழும் மக்களுக்கு ஒரு சோதனை காலம் வந்தது. அதாவது சுமார் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகள் முன்பு தோன்றியது பௌத்த மதம். வைதிக தர்மத்தின் மீது போர் தொடுத்தது. அதற்கு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri
முன்பே இருந்தது ஜைனம். இவை இரண்டும் வைதிக தர்மத்தின் மீது போர் தொடுத்தன; வேதத்தை ஏற்க மறுத்தன; கண்டித்தன.

மகத மன்னன் பிந்துசாரன் ஜைனத்தை வளர்த்தான். பின்னே அசோகன் பௌத்த மதத்தை ஆதரித்தான். இவ் விரண்டு மதங்களும் வைதிக தர்மத்தின் வேர்க்கெல்லிகளாக விளங்கின; நாடு முழுவதும் பரவின.

இவை தவிர, மற்றும் 92 வகையான மத பேதங்கள் நமது நாட்டிலே நிலவின. உலக மாதாவாகிய சக்தியை வழிபடுவோர் சாக்தர் ஆவர். சாக்தர் மூன்று வகையினர். தக்ஷிண மார்க்க சாக்தர், வாமசார சாக்தர், கௌல மார்க்க சாக்தர்.

இவருள் வாமசாரரும், கௌல மார்க்கரும் செய்த அக்கிரமங்கள் கொஞ்சமன்று. தெய்வத்தின் பெயரால் மது அருந்தினர்; மாமிசம் தின்றனர்; பெண்களை பலியிட்டனர். சொல்ல முடியாத அக்கிரமங்கள் பல.

காபாலிகர் என்று ஒரு கூட்டம். இவர்கள் மண்டை ஓடுகளைக் கோர்த்துத் தங்கள் கழுத்திலே மாலையாக தரித்து இருப்பார்கள். மது அருந்துவார்கள். நர மாமிசம் தின்பார்கள்; உடல் முழுவதும் சாம்பல் பூசித் திரிவார்கள். ஆண் பெண் ஆகிய இருபாலரும் வேற்றுமையின்றித் திரிவார்கள்.

பாசுபதர் என்று இன்னொரு கூட்டம். இவர்கள் பசுபதியை வணங்குவார்கள். அதாவது சிவனை வழிபடுவோர். உயிர்ப்பலி செய்வார்கள். இறைச்சியுண்பார்கள்.

காலாமுகர் என்று ஒரு கூட்டம். இவர்கள் மண்டை ஓட்டில் உண்பார்கள். மந்திரம் ஜபிப்பார்கள். உடலிலே பிணத்தின் சாம்பலைப் பூசித் திரிவார்கள். அச்சாம்பலையே தின்பார்கள். மதுபானம் செய்வார்கள், தண்டம் ஏந்தித் திரிவார்கள்.

பைரவர்கள் என்று ஒரு கூட்டம். கொடி பிடித்திருப்பார்கள். அதிலே நாய் பொறித்திருப்பார்கள். பைரவரே

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இவர்களது தெய்வம். தெய்வத்தின் பெயரால் அட்டூழியம் செய்த கூட்டத்தில் இதுவும் ஒன்று.

மல்லாரிகள் என்று ஒரு கூட்டம். பெண்களைத் தூக்கிச் சென்று மலையிலிருந்து உருட்டிக் கொன்று தெய்வ வழிபாடு செய்கிறவர்கள்.

வேத நெறி பற்றியவர்களுக்குள்ளே இரண்டு கட்சி. ஒன்று, பூர்வ மீமாம்சகர் கட்சி. மற்றொன்று உத்தர மீமாம்சகர் கட்சி.

பூர்வ மீமாம்சகர் என்ன கூறினர்? ''கர்மம் செய்வதன் மூலமே ஒருவன் மோட்சம் பெற முடியும். கர்மம் செய்யுமாறு வேதங்கள் கட்டளையிடுகின்றன'' என்று கூறினர்.

உத்தர மீமாம்சகர் என்ன கூறினர்? ''கர்மம் செய்வது ஒன்றே முற்ற முடிந்த முடிவு ஆகாது, கர்மா ஒருவனது மனத்தைப் பக்குவப்படுத்தி பயிற்சி அளிக்கும். ஆத்ம விசாரத்துக்கு வழிகோலும். அவ்வளவே; ஆத்ம விசாரமே முக்தியளிக்கும்'' என்றனர்.

இவ்வாறு பல்வேறு வகையால் நாடு நலிவுற்றது. அத்தகைய நசிவிலிருந்து மீட்பதற்குரிய ஒருவரை நாடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அத்தகைய ஒருவரும் தோன்றினார்.

அவரே ஆதி சங்கர பகவத் பாதர்.



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சங்கரர் வருகை

ஆயிரத்து இருநூறு ஆண்டுகள் முன்பு ஸ்ரீ சங்கரர் அவதரித்தார். அவதரித்த புண்ணிய க்ஷேத்திரம் காலடி. இது கேரள ராஜ்யத்தில் ஆலவாய்க்கு வடமேற்கே பன்னிரண்டு மைல் தூரத்திலே உள்ளது.

சங்கரரின் தந்தையார் சிவகுரு. தாயார் ஆர்யாம்பாள். சங்கரர் தமது மூன்றாவது வயதில் தந்தையை இழந்தார். எனவே, அவரை வளர்க்கும் பொறுப்பைத் தாயார் ஏற்றார். தமது ஐந்தாவது வயதில் உபநயனம் செய்யப்பெற்றார் சங்கரர். விரைவிலே வேத சாஸ்திரங்களைக் கற்றார். துறவு மேற்கொள்ள விரும்பினார்; தாயாரிடம் அனுமதிவேண்டினார். அந்த அம்மையார் இணங்கவில்லை. ஒரு நாள் ஆற்றிலே நீராடும்போது அவர்தம் காலை முதலை பற்றிக்கொண்டது.

''அம்மா'' என்று கூவினார் சங்கரர். ''காலை முதலை பற்றிக்கொண்டதே'' என்று ஓலமிட்டார். ''இப்போதாவது சந்நியாசம் பெற அனுமதி கொடுங்கள். முதலையிடமிருந்து என்னைக் காப்பாற்றலாம்'' என்றார்.

தாயின் மனம் இளகியது. ''எப்படியாவது உயிருடன் இருந்தால் போதும்'' என்று நினைத்தார். எனவே, 'சரி' என்றார். அவ்வளவுதான். முதலை அவர் தம் காலை விட்டது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri
தாயை வணங்கினார் சங்கரர்; அன்னையின் அந்திய காலத்தில் வந்துவிடுவதாக உறுதியளித்தார்; வீடு துறந்தார்; ஊர் நீங்கினார்; வடக்கு நோக்கிப் புறப்பட்டார்; நர்மதை நதிக்கரை அடைந்தார்.

உபநிஷதங்களின் பொருளை அறிந்து உலகுக்கு அறிவித்த குருமார்களில் ஒருவர் கௌடபாதர் என்பவர், மாண்டுக்கிய உபநிஷதத்துக்கு இவர் அருளிய விரிவுரை மாண்டுக்கிய காரிகை என்று வழங்கப்படுவது. இத்தகைய தவமுனிவரின் சிஷ்யராக விளங்கி ஆத்ம சாக்ஷாத்காரம் பெற்றவர் கோவிந்த பகவத் பாதர் என்பவர்.

இவர் நர்மதை கரையில் யோகத் தவத்தில் அமர்ந்திருந்தார். அவரிடம் சென்றார் சங்கரர்; உபதேசம் பெற்றார்; அவரது விருப்பப்படி அத்வைதப் பிரச்சாரம் செய்ய வேண்டி காசி நகரம் போய்ச் சேர்ந்தார். அந்தக் காலத்திலே வேத சாஸ்திரங்களில் நல்ல பயிற்சி பெற்றவர்கள், காசியிலே கூடியிருந்தார்கள். காரணம் என்ன? அங்கேயுள்ள பண்டிதர்கள் மத்தியிலே நன்கு விவாதித்து ஒவ்வொருவரும் தம் தம் கருத்தை நன்கு வலியுறுத்துவர், அப்போதே அவர் சிறந்த பண்டிதர் என்று கருதப்படுவார். இந்த வழக்கத்தைப் பின் பற்றி, சங்கரரும் காசி சேர்ந்தார். காசியிலே வசித்தபோது உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத் கீதை ஆகிய வற்றிற்கு விரிவுரை எழுதினார். அவர்தம் விரிவுரை சிறப்புமிக்கது. வேதங்களிலே இவருக்கு இருந்த பயிற்சியும் ஆழ்ந்த அறிவும் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டும் விவாதத் திறமையும் பிறவும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் இவற்றில் காணப்படும்.

பூர்வ மீமாம்சகர்களிலே மிகச் சிறந்தவராக விளங்கினார் குமாரில பட்டர். அவரைச் சந்தித்து வாதம் செய்து வெற்றி பெற விரும்பினார் சங்கரர், ஏன்?

வேதத்திலே விதிக்கப்பட்டுள்ளபடி ஒவ்வொருவரும் தம் தம் கர்மாக்களைச் செய்தால் போதும். அதன் மூலம் இறைவனை அடையலாம் என்பது பூர்வ மீமாம்சகர்களின்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri
கொள்கை. இக்கொள்கையை வலியுறுத்தியவர் குமாரில பட்டர்.

சங்கரர் இக்கொள்கையை ஏற்கவில்லை. எனவே அவர் குமாரில பட்டருடன் விவாதித்து அவரை வெற்றி கொள்ள விரும்பினார்..

எனவே, குமாரில பட்டரைத் தேடிச் சென்றார் சங்கரர். அப்போது பட்டர் பிரயாகையில் இருந்தார். ஒரு குழி தயாரித்து, அதிலே இருந்து கொண்டு கழுத்தளவு வரை உமியை நிரப்பி, அந்த உமியிலே தீ மூட்டி உயிர்விடத் தீர் மானித்திருந்தார்.

பட்டரைச் சந்தித்தார் சங்கரர். 'உயிர்விட வேண்டாம்'' என்று தடுத்தார். ''வாது செய்ய வருக'' என்று அழைத்தார். அப்போது குமாரில பட்டர் கூறினார்:

''இளமையிலே நான் வேதத்தின் சிறப்பை நிலைநாட்ட விரும்பினேன். புத்த கொள்கைகளைக் கண்டிக்கக் கருதி னேன். கண்டிப்பது எப்படி? புத்தக் கொள்கைகளை நன்கு பயின்ற பிறகுதானே கண்டிக்க முடியும்? எனவே புத்தமதத்தில் சேர்ந்தேன். புத்த குருமார்களிடம் பயின்றேன். பிறகு அவர்களையே கண்டித்தேன். அதனால் குருத்துரோகம் செய்தவன் ஆனேன். அதற்குரிய தண்டனை இதுவே. எனவே, என்னைத் தடுக்க வேண்டாம். எனது சிஷ்யர் மண்டனமிசிரர் மாகிஷ்மதி நகரில் வசிக்கிறார். அவர் எனக்கு இணையானவரே. நீர் அங்கு சென்று அவருடன் வாது செய்க.''

இவ்வாறு கூறிவிட்டு உயிர் துறந்தார் குமாரில பட்டர்.

மாகிஷ்மதி நகரம் சென்றார் சங்கரர். மண்டனமிசிரரைக் கண்டார். வாதுக்கு அழைத்தார். மண்டன மிசிரர் எனப் படும் விசுவரூபாச்சாரியாரும் வாதுக்கு உடன்பட்டார்.

மண்டன மிசிரரின் மனைவியின் பெயர் உபயபாரதி என்பது. அவர் சரசுவதி தேவியின் அவதாரம். அந்த அம்மையாரை நீதிபதியாகக் கொண்டு இருவரும் வாதம் தொடங்கினர்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இந்த விவாதத்திலே சங்கரர் தோற்றால் அவர் இல்லறம் மேற்கொள்ள வேண்டும். விசுவரூபர் தோற்றால் சந்நியாசம் மேற்கொள்ள வேண்டும். இது தான் நிபந்தனை.

இருவரும் நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டனர். உபய பாரதி என்ன செய்தார்? இரு மலர்மாலைகளைக் கொண்டு வந்தார். சங்கரரை ஒன்றை அணிய சொன்னார். மற்றொன்றை மண்டனருக்கு அளித்தார். அணிந்து கொள்ளச் சொன்னார்.

''எவருடைய மாலை முதலில் வாடுகிறதோ அவரே தோற்றவர்'' என்றார். விவாதம் தொடங்கியது. ஒரு நாளா? இரண்டு நாட்களா? பதினேழு நாட்கள் தொடர்ந்து விவாதம் நடைபெற்றது.

பதினேழாம் நாள் மண்டனரின் மாலை வாடுவது கண்டார் உபயபாரதி. உடனே பிக்ஷைக்கு வருமாறு அவரை அழைத்தார். அதன் பொருள் என்ன? மண்டனர் தோற்று விட்டார். எனவே, துறவு மேற்கொண்டு பிக்ஷைக்கு வரவேண்டும் என்பதே. துறவிகளுக்கு அளிக்கப்படும் உணவு பிக்ஷை எனப்படும். மண்டனரும் தமது தோல்வியை ஒப்புக் கொண்டு துறவு மேற்கொள்ளச் சித்தமானார்.

அப்போது உபய பாரதி சொன்னார்; இந்த ''வெற்றி பூரண வெற்றியன்று. என்னுடன் வாது செய்து வெற்றி பெற்றாலே அது பூரண வெற்றியாகும்'' என்றார்.

சங்கரரும் 'சரி' என்றார். உபய பாரதியுடன் வாதம் செய்யச் சித்தமானார். இல்லறம் பற்றிக் கேட்டார் உபய பாரதி. சங்கரரோ இளமையிலே துறவு மேற்கொண்டவர். இல்லறம் பற்றி அவர் விவாதிப்பது எப்படி? எனவே, முப்பது தினங்கள் சென்றபின் மீண்டும் விவாதம் செய்ய வருவதாகச் சொல்லி உறுதியளித்தார். உபயபாரதியும் 'சரி' என, இல்லறம் பற்றி அறிவது எப்படி என்று எண்ணியவாறு புறப்பட்டார் சங்கரர்.

அமருகன் என்பவன் ஓர் அரசன். அவன் இறந்து போனான். அதை அறிந்தார் சங்கரர்; தமது யோக சக்தி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யினால் அரசனது உடலில் புகுந்தார். இறந்துபோன அரசன் உயிர் பெற்று எழுந்தான். அதுகண்ட மந்திரி பிரதானிகள் மகிழ்ச்சி அடைந்தார்கள். அரசனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

சங்கரரின் சிஷ்யரான பத்ம பாதர் அவரது உடலைப் பத்திரமாகப் பாதுகாத்து வந்தார்.

உயிர்பெற்று வந்த அரசனின் நடை உடை பாவனை களில் மாறுதல் கண்டாள் அரசி. அவை யாவும் அரசனுடை யனவாக இல்லை. எனவே அவள் சந்தேகம் கொண்டாள்.

''இவர் நமது அரசர் அல்லர். அரசர் இறந்தது உண்மை. உயிர் பெற்று எழுந்து வந்தவர் அவர் அல்லர். வேறு எவரோ ஒரு மகான் அவரது உடலில் புகுந்து வந்திருக் கிறார். இவர் இங்கேயே இருக்குமாறு செய்துவிட வேண் டும்'' என்று முடிவு செய்தாள். மந்திரியை அழைத்தாள். விஷயத்தை விளக்கினாள். மந்திரி என்ன செய்தார்?

துறவியின் உடல் எங்கேயாவது காணப்பட்டால் அதை உடனே தீயிட்டுக் பொசுக்குமாறு கட்டளை பிறப்பித்தார்.

அரசாங்க ஏவலாளர்கள் எங்கும் தேடத் தொடங்கி னார்கள். சங்கரரின் உடலைக் கண்டார்கள், உடனே அதைத் தீயிலிட்டார்கள். இதை உடனே தமது குருவுக்கு அறிவித்தார் பத்ம பாதர். அது கேட்ட உடனே அரசன் இறந்தான். சங்கரர் மீண்டும் தமது உடலில் பிரவேசித்து எழுந்தார், மாகிஷ்மதி நகரம் சென்றார். உபய பாரதியுடன் வாது செய்ய வந்திருப்பதாக அறிவித்தார். இவரைக் கண்ட உடனேயே உபய பாரதி தமது தோல்வியை ஒப்புக் கொண் டார். மண்டன மிசிரர் தோற்றார் என்பதை உபய பாரதி ஒப்புக் கொண்டார். துறவு ஏற்க அநுமதி வழங்கினார். சங்கரரும் அவரை ஏற்றுக் கொண்டார். சுரேசுவரர் என்ற சந்நியாச நாமம் அளித்தார். சரசுவதி அம்சமான உபய பாரதியிடம் சங்கரர் ஒரு வரம் வேண்டினார். என்ன வரம்?

தாம் செல்லும் இடம் எங்கும் தம்மைத் தொடர்ந்து வரவேண்டும் என்பதே. தேவியும் அதற்குச் சம்மதித்தாள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri
ஆனால் ஒரு நிபந்தனை. சங்கரர் திரும்பிப் பாராமல் செல்ல வேண்டும், ''திரும்பிப் பார்த்தால் அந்த இடத்திலேயே நின்று விடுவேன், பின் தொடர்ந்து வரமாட்டேன்'' என்றாள் தேவி.

''சரி அப்படியே ஆகட்டும்'' என்றார் சங்கரர். விசுவ ரூபர் தவிர மற்றும் மூன்று சிஷ்யர் ஏற்பட்டனர் சங்கரருக்கு. ஆக, நான்கு சிஷ்யர்கள். சிஷ்யர்களுடன் மேற்குத் தொடர்ச்சி மலை வழியே நடந்து வந்து கொண்டிருந்தார் சங்கரர், பின்னே, 'கலீர் கலீர்' என்று கால் சிலம்பு ஒலிக்க வந்து கொண்டிருந்தாள் தேவி. எல்லாருமாக சிர்ங்க கிரி வந்து சேர்ந்தார்கள். சிர்ங்க கிரியின் இயற்கை வனப்பிலே மூழ்கினார் சங்கரர். ஆங்கு ஓரிடத்தில் சூல் கொண்ட தவளை ஒன்று வெயிலின் கொடுமை தாங்க முடியாமல் தவித்தது. அது கண்ட நல்லபாம்பு ஒன்று தவளை மீது இரக்கம் கொண்டு படம் எடுத்து நிழல் கொடுத்துக் கொண்டிருந்தது. மற்றோரிடத்தில் புலியும் பசுவும் சேர்ந்து நீர் குடிக்கக் கண்டார். தவயோகியர்க்குத் தக்க இடம் இதுவே என்று கருதினார்.

அதுவரை அவரைத் தொடர்ந்து வந்த தேவியின் சிலம்பொலி கேளாதிருக்கவே சற்றுத் திரும்பினார் சங்கரர். அவ்வளவில் நின்றுவிட்டாள் அன்னை. அங்கேயே பாறை மீது ஸ்ரீ சக்ரம் வடித்து சாரதாதேவி என்ற பெயரில் அன்னையை பிரதிஷ்டை செய்தார் சங்கரர்.

இதுவே சிர்ங்கேரி ஸ்ரீ சாரதாபீடம். ''இந்த பீடத்தில் அமர்பவர் எவரே ஆயினும் அவர் நானே ஆவர்'' என்று அருள் பாலித்தாள் அன்னை சாரதாதேவி.

இந்த பீடத்தின் முதல் ஆச்சாரியராக அமர்ந்து அத்வைதப் பிரசாரம் செய்யும்படி ஸ்ரீ சுரேசவரருக்குக் கூறினார் சங்கரர்.

சுரேசுவராச்சாரியாரும் சங்கரரின் கட்டளையை ஏற்று சாரதர் பீடத்தின் முதல் ஆச்சாரியராக அமர்ந்தார்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



வேதமும் நான்கு பீடமும் நான்கே

பாரத தேசம் சாமானியமானதா? வேதத் திருநாடு அல்லவா? எனவே, இதை ஒரு யக்ஞபூமியாகக் கருதினார் சங்கரர்; நான்கு திசைகளிலும் நான்கு பீடங்களை ஏற்படுத்தினார். வேதங்கள் நான்கு, பீடங்களும் நான்கு. கிழக்கே பூரி; மேற்கே துவாரகை; தெற்கே சிர்ங்கேரி; வடக்கே பத்ரிநாத். பூரியிலே ரிக்வேத பீடம்; சிர்ங்கேரியிலே யஜுர் வேத பீடம்; துவாரகையில் சாமவேத பீடம்; பத்ரியில் அதர்வண வேத பீடம், இப்படியாக நான்கு வேதங்களுக்கும் நான்கு பீடங்களை ஏற்படுத்தினார். ஒவ்வொரு பீடத்துக்கும் ஒவ்வொரு சிஷ்யரை அதிபதியாக நிய்மித்தார். அத்வைத வேதாந்தப் பிரசாரம் செய்யுமாறு கட்டளையிட்டார்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



இதிலே சிறப்பு என்ன என்றால் இந்த நான்கு பீடங்கள் அமைந்துள்ள இடம்தான். இந்திய நாட்டின் பரப்பளவு சுமார் 1960 சதுர மைல். இதை நான்கு சம வட்டங்களாக்கினால் ஒவ்வொன்றும் 490 சதுரமைல் கொண்டதாயிருக்கும். இந்த முறையில்தான் நான்கு பீடங்களும் அமைக்கப் பட்டுள்ளன எனலாம்.

துங்கை ஆற்றின் கரையிலே பாறைமீது ஸ்ரீசக்ரம் வரைந்து பிரும்ம வித்யா சொரூபிணியாகிய ஸ்ரீ சாரதா தேவியை பிரதிருஷ்டை செய்த சங்கரர், கைலைநாதர் அருளிய ஸ்படிக லிங்கமாக விளங்கும் ஸ்ரீ சந்திரமௌலீசுவரரையும் ரத்தின கர்ப்பகணபதியையும் ஸ்ரீ சுரேசுவரரிடம் கொடுத்து பூஜை செய்து வருமாறு கட்டளையிட்டார்.

ஸ்படிகம் தூய்மையானது; வெண்மையானது; மாசில்லாதது: இறைவன் எவ்வித வடிவமும் இல்லாதவன்; எவ்வித நிறமும் இல்லாதவன். விரும்பியவர் விரும்பியவாறு காட்சி அளிப்பவன் என்பதையே ஸ்படிக லிங்கம் குறிக்கிறது. ஸ்படிக லிங்கமாகிய ஸ்ரீ சந்திர மௌலீசுவரரை உற்று நோக்கினால் உச்சியில் நிலவொளி வீசுதல் காணலாம். நிலவொளி எதைக் குறிக்கும்? அறிவைக் குறிக்கும். ஆனந்தத்தைக் குறிக்கும். இறைவன் அறிவாய் விளங்குகிறான்; ஆனந்தமாய் விளங்குகிறான் என்பதே இதன் பொருள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சங்கரருக்குப் பின

இருபதாம் நூற்றாண்டில் வாழ்கிறோம் நாம். ஸ்ரீ சங்கரரின் காலம் எட்டாம் நூற்றாண்டு என்று வரையறுத் துள்ளார்கள். எட்டாம் நூற்றாண்டுக்கும் இருபதாம் நூற்றாண்டுக்கும் இடையே ஆயிரத்து இருநூறு ஆண்டுகள் உருண்டு ஓடி விட்டன. அதாவது பன்னிரண்டு நூறு ஆண்டு கள். இந்தக் காலத்திலே ஸ்ரீ சாரதா பீடத்தில் அமர்ந்து அத்வைத வேதாந்தம் பரப்பிய ஆச்சாரியார் பலர். ஸ்ரீ சுரேசுவரர் முதல் முப்பத்தைந்து பேர் குரு பரம்பரையாக வந்துள்ளனர். முப்பத்து ஐந்தாவது பீடாதிபதியாக விளங்கு பவர் ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மகா சந்நிதானம் அவர்கள் ஆவார்கள். இந்த முப்பத்தைந்து பீடாதிபதிகளும் சங்கிலித் தொடர்போல ஒருவர் பின் ஒருவராக ஸ்ரீ சாரதா பீடத்தில் அமர்ந்து ஸ்ரீ ஆதிசங்கரர் அளித்த அத்வைத வேதாந்த தர்ம சாம்ராஜ்யத்தைக் காத்துப் பேணி வருவது நமது பாரதத்தின் பெரும் பேறே ஆகும்.

இந்த ஆயிரத்து இருநூறு ஆண்டு வரலாற்றினை அறிய வேண்டுவது ஆஸ்திகர்களின் முக்கிய கடமையாகும். விரி வாக இல்லாவிடினும் சுருக்கமாக அறிய வேண்டுவது அவ சியம். எனவே பருந்துப் பார்வையாக இவ்வரலாற்றினைக் காண்போம்.

ஸ்ரீ சுரேசுவரருக்குப் பின் வந்த பத்தாவது ஆச்சாரியார் ஸ்ரீ வித்யா சங்கர தீர்த்தர் ஆவார். இவருடைய காலத்தில் வாரங்கல் என்ற இடத்திலிருந்து ஓர் இளைஞர் வந்தார். ஸ்ரீ வித்யாசங்கர தீர்த்தரிடம் சிஷ்யராகி சந்நியாசம் பெற்று ஸ்ரீ பாரதி கிருஷ்ண தீர்த்தர் என்ற யோக பட்டமும் பெற் றார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இவரது தமையனார் இவரைத் தேடி வந்தார். தாமும் சந்நியாசம் பெற விரும் பினார். அவரது விருப்பத்தை அறிந்த ஸ்ரீ வித்யாசங்கர

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri
தீர்த்தர் அவருக்கும் சந்நியாசம் அளித்தார். வித்யாரணியர் எனும் யோக பட்டமும் அளித்தார். பாரதி கிருஷ்ண தீர்த்தர் ஆச்சாரியருடனேயே இருந்துவிட்டார். வித்யாரணியரோ தேச சஞ்சாரம் செய்யப் புறப்பட்டு விட்டார்.

ஸ்ரீ வித்யா சங்கர மகா சுவாமிகள் லம்பிகா யோகத்தில் அமர்ந்து விட எண்ணினார். லம்பிகா யோகம் என்பது என்ன என்றால் நாக்கை உள்ளுக்கு மடித்து இழுத்து, உச்சுவாச நிச்சுவாசங்களை நிறுத்தி, தமது விருப்பம்போல் அதாவது முன்னரே தாம் உத்தேசித்து வைத்திருந்தபடி உடலை மாற்றி அமைத்துக் கொள்வது.

இவ்வாறு யோக சித்தி பெற விரும்பிய ஆச்சாரியார் ஒரு சிற்பியை அழைத்தார். சதுர்மூர்த்தி வித்யேசுவர உருவம் ஒன்றைக் கல்லிலே வடிக்கச் சொன்னார்.

துங்கை ஆற்றின் கரையிலே பாதாள அறை ஒன்றை அமைக்கச் சொன்னார். பிறகு தமது சிஷ்யரை அழைத்தார்.

''இந்தப் பாதாள அறையிலே நான் யோகத்தில் அமர்ந்து விடுவேன். கதவை மூடிவிடுங்கள். பன்னிரண்டு ஆண்டு காலம் யாரும் கதவைத் திறவாதீர்கள். பிறகு திறந்து பாருங்கள். இதோ இந்தச் சிலை போல நான் இருக்கக் காண்பீர்கள்'' என்று கூறினார். இவ்வாறு கூறிப் பாதாள அறையிலே யோகத்தில் அமர்ந்தார். கதவும் மூடப்பட்டது.

மூன்று ஆண்டுகள் வரை யாரும் கதவைத் திறக்க வில்லை. மூன்றாவது ஆண்டு யாரோ ஒருவர் கதவைத் திறந்து விட்டார். திறந்தவர் என்ன கண்டார்? ஸ்ரீ வித்யா சங்கரரைக் கண்டாரா? இல்லை. இல்லை. சிலையில் காணப் பட்டவாறு லிங்கம் மட்டும் உருவாயிருந்தது. சிலை முழுவதும் உரு ஆவதற்குள் அவசரப்பட்டு விட்டார்கள்; கதவைத்திறந்து விட்டார்கள்.

ஸ்ரீ வித்யா சங்கரர் வடித்த சதுர்மூர்த்தி வித்யேசுவரர் சிலையை இன்றும் சிர்ங்கேரியில் காணலாம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

கதவு CC-0. In Public Domain. Digitized by eGangotri

திறக்கப்பட்ட சமயத்தில் ஸ்ரீ பாரதி கிருஷ்ண தீர்த்த சுவாமிகள் சிர்ங்கேரியில் இல்லை. யாத்திரையில் இருந்தார்கள். நடந்ததை அறிந்து சுவாமிகள் மிக வருந்தினார்கள். பிறகு தம் குருநாதருக்கு ஒரு கோயில் எழுப்பினார். அவர் தயாரித்த சிலைக்கும் ஒரு கோயில் எழுப்பினார். இப்பொழுதும் ஸ்ரீ வித்யா சங்கர தீர்த்தர் யோக நிஷ்டையில் இருப்பதாகவே நம்புகிறார்கள். இரவு நேரத்தில் அங்கே மணி சப்தம் கேட்பதாகவும் சொல்கிறார்கள். மடத்திலிருந்து வெளிவரும் ஸ்ரீ முகங்களில் வித்யா சங்கரர் என்ற முத்திரையே உபயோகிக்கப்பட்டு வருகிறது. ''வித்யா சங்கரருடைய மலரடி போற்றுபவர்'' என்றே உபயோகிக்கப்படுகிறது.

ஸ்ரீ பாரதி கிருஷ்ண தீர்த்த மகாசுவாமிகள் பதினோராவது பீடாதிபதியாக ஸ்ரீ சாரதா பீடத்தில் அமர்ந்தார், ஸ்ரீ வித்யாரணியரோ ஹம்பி அருகே மதங்க பர்வதத்தில் தவம் செய்து வந்தார்.

சதுர்மூர்த்தி வித்யேசுவரர்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

விஜயநகர சாம்ராஜ்யம்

இந்திய சரித்திரத்தைச் சிறிது கவனிப்போம். கி. பி. 1290 முதல் 1326 வரை வட இந்தியாவில் அரசு செலுத்திய கில்ஜி வம்சத்தினர் ஒருவர் பின் ஒருவராகத் தென்னாட்டின் மீது படையெடுத்தனர்.

அந்த சமயத்தில் தேவகிரியில் யாதவர்கள் ஆண்டு வந்தார்கள். வாரங்கலில் காகதீயர்கள் ஆட்சி செலுத்தி வந்தார்கள். துவார சமுத்திரத்தில் ஹோய்சாலர்கள் ஆண்டு வந்தார்கள். மாலிக்காபூர் என்பவர் இந்த மூன்று ராஜ்யங்களின் மீதும் படையெடுத்தார்; வென்றார். நாளடைவில் இந்த மூன்று ராஜ்யங்களும் கில்ஜி வமிசத்தினர் ஆட்சிக்கு உட்பட்டன. இந்த மூன்று ராஜ்யங்களையும் வென்ற பின் மேலும் தெற்கு நோக்கி வந்தார் மாலிக்காபூர்; பாண்டிய பேரரசின் மீது படையெடுத்தார். பாண்டிய அரசு வீழ்ந்தது. ஏராளமான பொன்னையும் பொருளையும் எடுத்துச் சென்றார் மாலிக்காபூர். இவ்வாறு முஸ்லிம் ஆட்சி தென்னாட்டில் பரவவே இந்துக்கள் என்ன நினைத்தார்கள்? எங்கே தங்கள் மதத்துக்கு ஆபத்து வந்து விடுமோ என்று பயந்தார்கள். முஸ்லிம் ஆட்சி தென்னாட்டில் பரவாமல் தடுத்து நிறுத்தும் திறமை வாய்ந்த இந்து பேரரசு ஒன்று ஏற்பட வேண்டும் என்று கருதினார்கள். இந்த எண்ணத்தின் பிரதிபலிப்பாக இருவர் தோன்றினர். ஒருவர் ஹரிஹரன்; மற்றொருவர் புக்கன்.

ஹரிஹரன் புக்கன் ஆகிய இருவரும் என்ன செய்தனர்? மதங்க பர்வதச் சாரலிலே தவம் செய்து கொண்டிருந்த முனிவர் வித்யாரணியரைச் சரண் அடைந்தனர். தங்கள் கருத்தை தெரிவித்தனர்.

வித்யாரணிய முனிவர் ஹரிஹரன் புக்கன் ஆகிய இருவருக்கும் ஊக்கம் அளித்தார். துங்கபத்திரை நதிக்கரையிலே

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by eGangotri

ஸ்ரீ சக்ர வடிவில் ஒரு நகரை அமைக்கச் சொன்னார். அந்த நகருக்கு வித்யா நகரம் என்று பெயரிட்டார். அங்கிருந்து செங்கோல் செலுத்துமாறு கட்டளையிட்டார். பொருள் இல்லாமல் எப்படி நகர் அமைப்பது? எப்படி ராஜ்ய பாரம் வகிப்பது? என்று ஹரிஹரனும் புக்கனும் கலங்கினர்; வித்யாரணிய முனிவரை வேண்டினர். வித்யாரணிய முனிவரும் புவனேசுவரி தேவியை வேண்டினார். தேவியின் அருளால் அந்த இடத்திலே பொன் மழை பொழிந்தது. பொன்னை எடுத்துக் கொள்ளுமாறு கூறினார் முனிவர்.

ஹரிஹரன், புக்கன் ஆகிய இருவரும் பொன்னைக் கொண்டு ஸ்ரீவித்யா நகரத்தை அமைத்தனர்; பெரும் சேனை திரட்டினர்; பக்கத்து ராஜயங்கள் மீது படையெடுத்தனர்; வெற்றிமேல் வெற்றி கொண்டனர்; அவ்வெற்றியின் சின்னமாக விஜய நகரம் என்றதொரு நகரையும் அமைத்தனர். துங்கபத்திரை ஆற்றின் ஒரு கரையிலே வித்யா நகரமும் மற்றொரு கரையிலே விஜய நகரமும் அமைந்தன. சரித்திரப் புகழ் பெற்ற விஜய நகர சாம்ராஜ்யம் தோன்றியது.

வித்யா நகரம் கி. பி. 1336-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ந் தேதி ஸ்தாபிக்கப்பட்டது. ஒன்பது வாசல்கள் கொண்ட அந்த நகரம் ஸ்ரீ சக்ர வடிவில் அமைக்கப்பட்டது. ஸ்ரீவித்யை ஆகிய தேவியின் வாசஸ்தலம் அது என்பது பொருள்.

விஜயநகர சாம்ராஜ்யம் வெற்றிமேல் வெற்றி பெற்றுப் பரந்து விரிந்தது. சாம்ராஜ்ய அதிபதிகளான ஹரிஹர தேவரும், புக்க தேவரும் தங்களுடைய சத்திரம், சாமரம், சிம்மாசனம் முதலிய எல்லாவற்றையும் ஸ்ரீ வித்யாரணிய முனிவரின் திருவடிகளில் சமர்ப்பித்து வணங்கினார்கள். சத்ரம், சாமரம், சிம்மாசனம் முதலிய யாவும் அரசரின் சின்னங்கள். இந்த அரசும், அரச சின்னங்களும் எவருடைய அருளினாலே அவர்களுக்குக் கிடைத்தன? ஸ்ரீ வித்யாரணிய முனிவரின் அருளினாலன்றோ? எனவே விஜய நகர சாம்ராஜ்ய மன்னர்கள் ஸ்ரீவித்யாரணிய முனிவர்பால் மிகுந்த பயபக்தி, நன்றி விசுவாசத்துடன் நடந்து கொண்டார்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

''இந்த ராஜ்யமும் ராஜ்ய தனங்களும் சிஹ்ன்ங்களும் தங்கள் திருவருளால் அன்றே எங்களுக்குக் கிடைத்தன. ஆகவே தாங்களே இந்தச் சிறப்புகளுக்கெல்லாம் உரியவர்கள்'' என்று கூறினார்கள். அவற்றையெல்லாம் அவரது திருவடித் தாமரையில் வைத்து வணங்கினார்கள். ''கர்நாடக சாம்ராஜ்ய ஸ்தாபகாசார்ய'' என்று அவரைக் கொண்டாடினார்கள். அவரது நல்லுரைகளைக் கேட்டு அவற்றின் படி நடந்தார்கள்.

இந்த சமயத்திலேதான் சிர்ங்கேரியிலே ஸ்ரீ பாரதி கிருஷ்ண தீர்த்த மகா சுவாமிகள் வித்யா சங்கரருக்கு ஆலயம் எழுப்பிக் கொண்டிருந்தார்.

இந்த ஆலய கும்பாபிஷேகத்தின்போது ஸ்ரீவித்யாரணிய முனிவரும், விஜய நகரத்து அரசரும் விஜயம் செய்தனர். அந்த சமயத்தில் சிர்ங்கேரிக்குச் சில கிராமங்களை இனாமாக வழங்கினார் அரசர். காலப்போக்கில் சிறிது சிறிதாகப் பல கிராமங்களை விஜய நகர மன்னர்கள் சிர்ங்கேரிக்கு இனாமாக வழங்கினார்கள். சில குடில்களே நிர்மாணிக்கப்பட்டிருந்த சிர்ங்கேரி நாளடைவில் பெரியதொரு குக்கிராமமாக இருந்த சிர்ங்கேரி நாளடைவில் பெரியதொரு சமஸ்தானமாயிற்று. மத விஷயங்களில் ஒரு மன்னருக்குரிய சகல அந்தஸ்துகளையும் சிர்ங்கேரி பீடாதிபதிகளுக்கு வழங்கினார்கள் விஜய நகர சாம்ராஜ்யப் பேரரசர்கள். மன்னருக்குரிய சிவிகை, சத்ரம், சாமரம் முதலிய யாவும் வழங்கினர். அன்று முதல் இன்றுவரை சிர்ங்கேரி பீடாதிபதிகள் ஒரு மன்னருக்குரிய சகல விருதுகளுடனும் விளங்குகிறார்கள். சர்வலோக சரண்யையாகிய ஸ்ரீ சாரதையின் பிரதிநிதிகள் அல்லவா?

விஜய நகர சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்ற பின்னர் அதற்கு அடங்கியிருந்த குறுநில மன்னர் பலர் சிர்ங்கேரி மடத்துக்கு வணக்கம் செலுத்தி வந்தார்கள். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் நாயக்க மன்னர்கள். இவர்கள் ஏராளமான நிலங்களை சிர்ங்கேரி சமஸ்தானத்துக்கு இனாமாக வழங்கினார்கள். மடத்து நிலங்களை எல்லாம் சர்வே செய்தார்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

மைசூரை ஆண்ட ஹைதர் அலி, ஸ்ரீ சிர்ங்கேரி பீடாதிபதிகளிடம் அளவு கடந்த பக்தி கொண்டவர். ஒரு சமயம் சிர்ங்கேரி ஆச்சாரியார் புனா சென்றார். அப்போது யானை குதிரை, ஒட்டகம், பல்லக்கு, பட்டுப் பீதாம்பரங்கள் முதலியனவும் பத்தாயிரத்து ஐந்நூறு ரூபாயும் காணிக்கையாக அளித்தார் ஹைதர்.

திப்புசுல்தான் ஆண்டபோது ஸ்ரீ சிர்ங்கேரி பீடாதிபதிக்கு 21 கடிதங்கள் எழுதியிருக்கிறார். சிர்ங்கேரி பீடத்திடம் திப்புவுக்கு இருந்த விசுவாசமும் குரு பக்தியும் அவற்றால் நன்கு விளங்குகின்றன.

திப்புவுக்குப் பிறகு, மூன்றாவது கிருஷ்ணராஜ உடையார் மைசூர் மன்னரானார். அவர் காலம் முதல், மைசூர் ராஜ்யத்தின் கடைசி மன்னரும் சென்னை கவர்னராயிருந்தவருமாகிய ஸ்ரீ ஜய சாமராஜ உடையார்வரை, அவர்கள் சிர்ங்கேரி மகா சந்நிதானத்தின்பால் கொண்டிருந்த பக்தி அளவிட முடியாத ஒன்று.



சாரதை ஆலயம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தர்பார் தரிசனம்

மேள வாத்தியங்கள் முழங்குகின்றன. 'ஸாம் பராக்!' என்ற குரல் எழுப்பிக்கொண்டு முன்னே வருகிறார் கட்டியக் காரர். மக்கள் எழுந்து வணங்குகிறார்கள். பூச்சக்கரக்குடைக் கீழ் சிர்ங்கேரி பீடாதிபதியான ஜகத்குரு வருகிறார். வந்து ஸ்ரீ சாரதா தேவியின் சிம்மாசனத்தில் அமர்கிறார். தலை யிலே கிரீடம்; கழுத்திலே பெரிய ஆபரணம்; கையிலே குத்திராட்ச மாலை; பொன்னாடை; விரல்களிலே பெரிய மோதிரங்கள். இதுவே ஜகத்குருவின் அலங்காரம்.

தேவியின் இடது பக்கம் அமர்கிறார், பீடாதிபதி. தேவிக்கு ஆராதனை நடக்கிறது. பீடாதிபதி எழுந்து நிற்கிறார். எல்லோரும் வணங்குகின்றனர். 'பஞ்சாங்கம் வாசித்தல்' என்று கூறுகிறார் கட்டியக்காரர்—பஞ்சாங்கம் வாசிக்கப் படுகிறது. அதன்பின் நான்கு வேதங்களும் ஒன்றன்பின் ஒன்றாக ஓதப்படுகின்றன. கட்டியக்காரர் கட்டியம் கூற, மீண்டும் மேள வாத்தியங்கள் ஒலிக்கின்றன. பீடாதிபதி எழுந்து செல்கிறார். தர்பார் கலைகிறது.

இதுவே நவராத்திரியின் போது ஸ்ரீ சிர்ங்கேரி ஜகத்குரு அளிக்கும் தர்பார் தரிசனம் ஆகும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

சம்பிரதாயத்தின் பொருள்

தர்பார் சம்பிரதாயந்தின் பொருள் என்ன? நவராத்திரி காலத்திலே அம்பாள் கொலுவீற்றிருக்கிறாள். எனவே அம்பாளின் பிரதிநிதியாக ஸ்ரீ சாரதா பீடத்தில் அமர்ந்து இருக்கும் சிர்ங்கேரி ஆசார்ய சுவாமிகளும் கொலுவீற்றிருக் கிறார்—அப்போது அவர் அணிந்திருக்கும் கிரீடம் அம்பாளின் திருவடிகளே. அவரது ஆபரணங்கள் அம்பாளிடமிருந்து எடுத்து அணிந்து கொண்டவை. உடை தேவியிடம் இருந்து பெற்றது. எனவே அவளிடமிருந்து பெற்று அவன் பிரதிநிதி யாக அவளுக்காக அரசு செலுத்துகிறார் என்று பொருள்.

இந்து அரசர்களுக்கு சத்ரபதி என்று பெயர். சத்ரம், சாமரம், சிம்மாசனம் இவை எல்லாம் அரசர்க்கு உரிய அங்கங்கள். சத்ரம் என்றால் குடை; சாமரம் என்றால் விசிறி. இவற்றுடன் சிம்மாசனத்தில் அமர்ந்து அரசு செலுத்துவது பண்டை வழக்கம்.

அந்தக் காலத்திலே அச்சுப்போட்ட பஞ்சாங்கம் இல்லை. எனவே தினமும் அன்றைய திதி, வாரம், நட்சத்திரம், யோகம், முதலியவற்றை அரச சபையில் கூறுவார்கள். அதன் படி நல்ல நேரம் பார்த்துச் செயல் புரிவார்கள்.

வேத பாராயணம் நடைபெறாமல் நல்ல காரியம் எதையும் செய்ய மாட்டார்கள். அரசர்களும் அவ்வாறு செய்து வந்தார்கள். அதனால்தான் தர்பாரிலே வேத பாராயணம் செய்கிறார்கள்.

அரசர் வரும்போது கட்டியம் கூறுவது பண்டைய மரபு. இந்த மரபை ஒட்டியே இப்போது சிர்ங்கேரி ஜகத்குரு அவர்கள் வரும்போது, ஸாம்பராக் என்று கூறுகிறார்கள்.

'ஸாம் பராக்' என்றால் 'சுவாமி வருகிறார் எச்சரிக்கை!' என்று பொருள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உள்ளும் புறமும்

ஸ்ரீ சிர்ங்கேரி ஜகத்குரு அவர்கள் தர்பாரிலே இவ்வளவு கோலாகலமாக வீற்றிருப்பினும் இந்த ஆடை ஆபரணங்களுக்கு உள்ளே அவரது காவி உடை காணலாம். எனவே உள்ளே துறவு; வெளியே அரச கோலம். அவர் தலையிலே தாங்கியுள்ள கிரீடம் பெரும் சுமையைக் குறிக்கும். கையிலே உள்ள ருத்திராட்சம் அம்பிகையின் அருளை முன்வைத்து இப்பெரும் சுமையாகிய பீடாதிபதிப் பொறுப்பை ஏற்று இருக்கிறார் என்பது பொருள்.

தர்பாரை மட்டும் காண்பவர்கள் ஸ்ரீ சிர்ங்கேரி ஜகத்குரு அவர்களின் பெருமையை நன்கு அறிய மாட்டார்கள். அவர் செய்யும் பூஜையையும் பார்க்கவேண்டும்.

முதலில் கணபதி வழிபாடு. பின்னர் ஸ்படிக லிங்கமாகிய ஸ்ரீ சந்திர மௌலிசுவரருக்கு அபிஷேகம். அப்போது வேதம் அறிந்த பண்டிதர் பலர், ருத்ரம் புருஷ சூக்தம், ஸ்ரீ சூக்தம் முதலியன ஜபம் செய்கிறார்கள். அந்த ஜபத்தின் ஒலி சிறிது சிறிதாக நம்மை ஓர் உயர்ந்த நிலைக்குக்கொண்டு விடுகிறது நம்மை மறந்து நாமும் பூஜையில் ஈடுபட்டு விடுகிறோம்.

ஆசார்ய சுவாமிகள் பூஜை செய்யும்போது எல்லாருடைய உள்ளங்களையும் ஈர்த்து ஆண்டவனிடம் ஒன்றச் செய்கிறார். நமது கவலைகளை மறந்து இறைவன் திருநாமத்தில் ஒன்றி விடுகிறோம். கவலை கவ்விய மனத்தை இறைவன் கவ்விக் கொள்கிறான். பூஜை இரண்டு மணி நேரம் நடக்கிறது. அந்த இரண்டு மணி நேரமும் மகா சந்நிதானம் அவர்கள் சிலைபோல் அமர்ந்திருக்கிறார்கள். கண்ணும் கருத்தும் பூஜையில் ஈடுபட்டு விடுகின்றன. அந்த சமயத்திலே அவர் முகத்திலின்றும் விசும் ஒளி நம்மை மெய் மறக்கச் செய்கிறது. பூஜை முடிகிறது. புத்துணர்ச்சி பெற்று எழுகிறோம் நாம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பீடம் ஏறுதல்-நேர்முக வர்ணனை

ஸ்ரீ சிர்ங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 35-வது பீடாதிபதி யாக ஸ்ரீ மகா சந்நிதானம் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த சுவாமிகள் வீற்றிருக்கிறார். இவர் தமக்கு அடுத்த பீடாதிபதி யாக ஸ்ரீ பாரதி தீர்த்தரைத் தேர்ந்தெடுத்துப் பீடத்தில் அமர்த்திய வைபவத்தை நேரில் காண்போமா?

அன்று விஜயதசமி. நவராத்திரி உற்சவத்தின் இறுதி நாள். சிர்ங்கேரி சாரதை கோவிலுக்குள் மகா சந்நிதானம் செல்கிறார். பூஜை முடித்து வெளியே வருகிறார். வெளியே மக்கள் கூடியிருக்கிறார்கள். அவர்களிடையே முக்கியமான செய்தி ஒன்றை அறிவிக்கிறார் மகா சந்நிதானம். அதாவது அடுத்த பீடாதிபதியைத் தாம் தெரிந்து எடுத்துவிட்டதாகச் சொல்கிறார்.

நவம்பர் மாதம். சிர்ங்கேரியில் பெரிய விழா. என்ன விழா? அடுத்த சந்நிதானத்தின் பீட ஆரோகண விழா.

இன்று நவம்பர் மாதம் ஒன்பதாம் தேதி. அதோ! வருங்கால பீடாதிபதி ஸ்ரீ சீதாராமாஞ்சனேயுலு வருகிறார். மாத்ருபூஜை செய்கிறார். ஏன் இதைச் செய்யவேண்டும்? தம்மை ஈன்றோரின் அனுமதிபெற்று. தாம் துறவறம் மேற் கொள்ள தாயையும் தந்தையையும் மலரிட்டு வணங்கி, அனுமதி கோருகிறார்; அனுமதியும் பெறுகிறார்.

ஒரு நாள் ஓடிவிட்டது. இன்று பத்தாம் தேதி. காலையில் அனுஷ்டானத்தை முடித்த வருங்கால பீடாதிபதி, சிர்ங்கேரி யிலுள்ள எல்லா கோவில்களுக்கும் சென்று வணங்குகிறார். முந்திய பீடாதிபதிகளின் சமாதிகளுக்குச் சென்று சேவிக் கிறார். பின் சங்கராச்சாரியரின் கோவிலில் அவருக்கென நடக்கும் ஆயுஷ்ஹோமம், கணபதி ஹோமம் ஆகியவற்றில் பங்கு கொள்கிறார்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அதோ, மீண்டும் எங்கே செல்கிறார்? அதுவா? நரசிம்ம வன அதிஷ்டானத்திற்குப் போகிறார். அங்கே பிள்ளையார் பூஜை நடக்கிறது. புண்யா வசனமும் நடந்து முடிகிறது.

இதோ வந்துவிட்டார். 16 பிராமணர்களை வைத்து தம் மூதாதையர்க்கு 'ஷோடச சிரார்த்தம்' செய்கிறார். இதுவே அவர் கடைசியாக தம் மூதாதையர்களுடன் உள்ளதொடர்பை அறுத்தெறிந்து, இனிப் புதிய பிறவி—துறவு மேற்கொள்ளப் போவதை எடுத்துக் காட்டுகிறது. பிரம்மசாரியாக அவர் செய்யும் இறுதி சமிதாதானமும் செய்துவிட்டார்.

அதோ அங்கே என்ன நடக்கிறது? அதுவா? அங்கு வேத விற்பன்னர் புதிய துறவிக்கு உயிர் நாடியான தண்டத்தை பிரதிஷ்டை செய்து அதற்குப் பூஜையும் செய்கிறார்கள். இன்று ஏகாதசி. ஆதலால் வருங்கால பீடாதிபதி மௌன விரதம், உபவாசம் இரண்டும் அனுஷ்டிக்கிறார்கள்.

பதினொன்றாம் தேதி காலை, நாம் எல்லோரும் அங்கு கூடிவிட்டோம். அனுஷ்டானம் முடித்துவிட்டு வருகிறார் வருங்கால பீடாதிபதி. இன்னும் சிலமணி நேரங்களில் அவர் பீடாதிபதியாகிவிடுவார்.

இதோ, அக்னி வளர்த்து, சமிதாதானம் செய்து விட்டார். பின்னர் தொடர்ந்து விரஜாஹோமம், புருஷ சூக்தம், ஸ்ரீ சூக்தம் எல்லாம் விமரிசையாக நடக்கின்றன.

இப்போது ஆற்றங்கரைக்குச் செல்வோமா? அதோ அவரும் வந்துவிட்டார். தம் மூதாதையர்க்குக் கடைசி முறை யாக அஷ்ட சிரார்த்தம் செய்து, பிண்டமும் போட்டு விடுகிறார். சந்நியாசத்தின் முந்திய வாழ்க்கை (பூர்வாச்ரமம்) இறுதி கட்டம் இதுவே.

அதோ ஆற்றில் இறங்கிவிடுகிறார். பூணூலை எடுத் தெறிந்து விட்டார். கட்டியிருந்த ஆடைகளையும் அவிழ்த் தெறிந்துவிட்டார். அதே சமயம் கரையிலிருந்த மஹா சந்நிதானம் ஆற்றில் இறங்கி. அவருக்குக்காஷாயம் கொடுக் கிறார். அதோ தண்டமும் கொடுத்து விட்டார். கையிலே

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கொடுக்கிறார் கமண்டலத்தை. காலுக்குப் பாதுகையும் தருகிறார். இதுவரை பிரம்மசாரியாக இருந்தவர் சந்நியாசி ஆகிவிட்டார்.

சந்திர சேகர பாரதி சுவாமிகள் அதிஷ்டானத்திற்கு மஹா சந்நிதானமும், சந்நிதானமும் செல்கின்றனர். அங்கே மகா சந்நிதானம் அவர்கள் சந்நிதானத்திற்கு தனிமையில் மகா வாக்கிய உபதேசம் செய்கிறார். அதைத் தொடர்ந்து ஹஸ்த மஸ்தக ஸம்யோகம் அளிக்கப்படுகிறது.

சாரதை கோவிலுக்குச் சந்நிதானம் அழைத்துச் செல்லப்படுகிறார். அங்கு அவரை வியாக்கியான சிம்மாசனத்தில் அமர்த்துகிறார் மகா சந்நிதானம் அவர்கள். சந்நிதானத்தின் தலைமீது சாலிக்கிராமம் வைக்கிறார். மகா சந்நிதானம் அவருக்குப் பூஜை செய்யும் அழகுதானென்ன! அவருக்குப் பாரதி தீர்த்தர் என்ற யோகப் பட்டமும், கொடுக்கிறார்.

இந்த பூஜை முடிகிறது. சந்நிதானம் மகா சந்நிதானம் அவர்களை வியாக்யான பீடத்தில் அமரச் செய்கிறார். அவரது பாதங்களுக்குப் பூஜை செய்கிறார். மகா சந்நிதானம் அவர்களின் பாதங்களை யாருமே தொட முடியாது; தொடவுங்கூடாது. இதன் பொருள் என்ன? ஆசாரியாரின் வழி நடப்பேன் என்று உறுதியைக் காட்டுகிறதோ இந்த பூஜை!

இதோ, இப்போது சந்நிதானத்திற்குக் காணிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

சரி, மீண்டும் மாலை கூட்டத்திற்கு வருவோமா?

மாலையாகிவிட்டது. கூட்டத்திற்கு அவர்களும் வந்து விட்டார்கள்.

இரவு மணி பத்து. இப்போது இரண்டு பல்லக்குகள் நகர்வலம் வருகின்றன. முதல் பல்லக்கு தங்கத்தினால் ஆனது. அதில் மகா சந்நிதானம் அவர்கள் தங்க கிரீட மணிந்து வீற்றிருக்கிறார். அடுத்த பல்லக்கு வெள்ளியால்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆனது. அதில் சந்நிதானமும் கிரீடமணிந்து வருகிறார். இரு பீடாதிபதிகளின் பல்லக்கு சேவை காண், கண்கோடி வேண்டாமோ?



வியாக்கியான பீடத்தில் பூஜை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

எனறும் வேள்வியே

சிர்ங்கேரி சென்றால் எல்லோருமே, எப்போதுமே ஒரு புதிய அனுபவத்தை அடைவர். ஆம், இது உண்மை. தாம் இதுவரை உணராத மன அமைதி இங்கு ஏற்படும். இந்த தூய பூமியை மிதித்தாலே, மனத்துயர் மறைந்தோடி விடும்: கலக்கங்கள் கதி கலங்கி கரையும். ஏன்? இந்த பீடத்தின் மகிமையால் மட்டுமா? இல்லை இல்லை! அங்கு அமர்ந்து, உலக மக்களின் பொருட்டு 'ஸர்வே ஜனா: சுகினோ பவந்து' என தினமும் ஞானத் தீயில் இடைவிடாமல் வேள்வி செய்யும் மகா சந்நிதானத்தின் தவ மகிமையினாலுங்கூட, என்றால் மிகையல்ல. இந்த வேள்வி ஆடம்பரமற்றது; ஆரவாரமில்லாதது; கர்த்தாவே தன்னலமற்ற, பற்றற்ற பலன் கருதாத உயர்நிலை அடைந்தவர்; தினசரி இவ்வேள்வியில் அர்ப்பணம் பிரம்மம்; அர்ப்பிக்கப்படும் பொருளும் பிரம்மம்; அக்கினியாகிய பிரம்மத்தில் பிரம்மத்தாலே ஹோமம் செய்யப்படுகிறது.

இந்த நித்ய வேள்வி தினமும் விடியற்காலை 4 மணிக்குத் தொடங்குகிறது. ஞானதேவர் மகா சந்நிதானம் அப்போதே விழித்தெழுகிறார். தரையில் தான் துயில் கொள்கிறார். கட்டிலில் அல்ல; எழும்போதே அவர் மெல்லிய குரலில் சங்கர பகவத் பாதரின் 'ப்ராதஸ்மரணம்' தோத்திரங்களை தியானிக்கிறார்.

காலைக் கடன்களை முடித்த பின் முகம் கால்களை சுத்தம் செய்தபின் தம் இருப்பிடம் சுற்றியுள்ள தோட்டத்திற்கு வருகிறார்.

அங்கிருந்து எங்கு இருளில் செல்கிறார்? அதோ தெரிகிறது ஸ்ரீ சந்திரசேகர பாரதியின் அதிஷ்டானம். ஆம், அங்கு தான் குரு ஸ்தோத்திரம் துதித்துக் கொண்டு வருகிறார் மகா சந்நிதானம். குருவைத் துதித்துக் கொண்டே அவர்தம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri
அதிஷ்டானத்தை வலம் வருகிறார். அங்கு நடப்பதைச் சுற்றி வருகிறார். அங்கு நடப்பதை நேரிற் கண்டறிய.

அடுத்து துங்கை நதிக் கரையிலுள்ள சந்தியா மண்டபம் விரைகிறார், ஸ்நானம் முடிந்தவுடன் ஆசிரமம் ஏகுகிறார், அனுஷ்டானங்கள் எவ்வித இடையூறுமின்றி காலை சுமார் 10 மணி வரை தொடர்கின்றன. உடன் மகா சந்நிதானம் தம் குருவின் பாதுகைகளுக்கும், பரமகுருவின் பாதுகைகளுக்கும் பாத பூஜை செய்கிறார்.

அதோ அங்கு சந்நிதானமும், இன்னும் சில முக்கிய சீடர்களும் இருக்கின்றனர். மகா சந்நிதானமும் அங்கு இருக் கிறாரே! அங்கு என்ன நடக்கிறது, சென்று பார்ப்போமா? ஆஹா! என்ன அருமையான பிரவசனம்! உபநிடதங்களில் இவ்வளவு ஆழமா! இவ்வளவு அர்த்தமா! இதை அறிய எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று வியக்கிறோம்!

சாரதை, சந்திர மௌளீஸ்வரர் ஆலயம் செல்வோமா? அங்கு மந்திர புஷ்பம் வழங்கப்படுகிறது. அதோ மகா சந்நி தானம், பாத பூஜை நடக்கும்போது அங்கு வந்தமர்ந்திருக் கிறார். அருள் சொரிகிறார். ஒவ்வொருவருக்கும் ஆசி கூறுகிறார். அமைதியற்ற உள்ளங்கள் சாந்தி அடைகின்றன.

மீண்டும் ஸ்நானம் செய்த பின்னர் மதியம் சுமார் இரண்டு மணிவரை, மற்ற நியமங்கள், தியானம் நீடிக்கின்றன. பின்னரே பிக்ஷை, பிக்ஷை முடிந்த பின்னர் வெளியே வந்து. பிக்ஷா வந்தனம் செய்த பக்தர்களுக்கு ஆசி வழங்குகிறார்.

உள்ளே சென்ற மகா சந்நிதானம் பகவத்கீதையை சிறிது நேரம் பாராயணம் செய்கிறார். சாஸ்திர கிரந்தங்களை ஆராய்வதில் ஈடுபடுகிறார்.

இவ்வளவும் முடிந்த பின்னர் ஒரு நொடி கூட ஓய்வு எடுக் காமல் தம் அலுவல் அறையில் அமர்ந்து நிர்வாகக் காரியங்களை கவனிக்கிறார். பின்னர் சில பக்த கோடி களுக்கு தரிசனம் கொடுத்துவிட்டு, மடத்தின் கோசாலைக்குச்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by eGangotri
சென்று வணங்குகிறார். வணக்கம் செலுத்துகிறார். ஆசிரமம் வந்தவுடன், மாலை ஆறு மணிக்கு மேல் மீண்டும் ஸ்நானம், அனுஷ்டானங்கள் தொடர்கின்றன. இரவு எட்டு மணிக்கு, மகா சந்நிதானம் ஸ்ரீ சந்நிரமௌளீஸ்வரருக்குச் செய்யும் பூஜையின் அழகு தானென்ன? நம்மால் அரை மணி கூட அசையாமல் இருக்க முடிய வில்லையே! இரண்டு மணி நேரம் ஆடாது அசையாது, மகா சந்திதானம் மனதினை ஒருமுனைப்படுத்தி, நம் மனத்தையும் அல்லவா ஆண்டவன் பால் ஈர்த்து விட்டார். அவர்தம் ஆன்ம பலம் எத்துணை பெரியது? ஆன்மீக பலத்திற்கு இதைவிட சிறந்த எடுத்துக் காட்டும் உண்டோ?

பூஜை முடிந்ததும், தம் குருவின் அதிஷ்டானத்திற்குச் சென்று வணங்குகிறார்.

ஒரு நாள் முழுதும் நாம் செய்த வேள்வியின் நிறைவை இது குறிக்கும்.

ஆசிரமம் திரும்பியவுடன், சாஸ்திரத்தில் தமக்கேற்பட்ட ஐயப்பாடுகளை தீர்த்துக்கொள்கிறார்.

இரவு நேரமாகி விட்டது, தம் குருவுக்கு வந்தனை செலுத்தியபடி துயிலச் செல்கிறார். தினமும் அலுக்காது மகா சந்நிதானம் இந்த வேள்வியை ஏன் செய்கிறார்? யாருக்காகச் செய்கிறார்?

தனக்காக நிச்சயமாக அல்ல; நமக்காக! நம் எல்லாருக்குமாக ஆண்டவனைத் தொழுகிறார். இடைவிடாது பிரரர்த்தனை வேள்விகள் செய்கிறார். ஒவ்வொரு நொடியும் மற்ற வருக்காக வேள்வி நடத்துகிறார்.

'யோக க்ஷேமம் வாஹாமியஹம்' என்பதே அவர்தம் தாரக மந்திரம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மகா சந்நிதானமும், சந்நிதானமும்

மகா சந்நிதானம் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மகா ஸ்வாமிகள் ஸ்ரீ சாரதா பீடத்தின் 35 வது பீடாதிபதி. ஞானதேவர்; தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபம்; காட்சிக்கு எளியவர்; அண்டினோர் துயர் தீர்க்கும் அண்ணல்; பல்மொழி வல்லவர். உலக க்ஷேமத்திற்காக தவம் செய்பவர்; பிறர் இன்பம் கண்டு தாமும் இன்புறுபவர்.

அவர் வழித்தோன்றல் சந்நிதானம் ஸ்ரீ பாரதி தீர்த்தர், அவரும் பல்மொழி வல்லவர், 36 வது பீடாதிபதியாகிய இவரும் தலைசிறந்த ஞானியே.

இவ்விருவரும் நீண்ட காலம் நம்மிடையே வாழ்ந்து, நமக்கு வழிகாட்ட ஆண்டவன் அருள்வானாக! அருள் வானாக! அருள்வானாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மலஹானிகரேசுவரர் கோயில்

இந்த கோயிலில்தான் பிரசித்தி பெற்ற விநாயகர் தூணில் உள்ளார். இந்த விநாயகரின் திருவுருவத்தை ஸ்ரீ அபிநவ நரசிம்மபாரதி சுவாமிகள் ஒரு தூணில் மஞ்சள் கொம்பினால் வரைந்தார். அந்த முழுமுதற் கடவுள் வளர்ந்து வருகிறார். அதிக சக்தி வாய்ந்தவர். இக் கோயிலில் மழைக்காகவும், அதே சமயம் இயற்கையின் சீற்றத்தைத் தடுக்கவும் விசேஷ பூஜைகள் நடக்கும்.

இவ்வாலயம் ஒரு குன்றின்மேலுள்ளது. ஆத்மாவின் தூய்மையை கெடுக்கும் அசுத்தங்களை முற்றிலும் விரட்டிய விபாண்டக முனிவரின் ஆலயம் இது. இந்த ஆலயத்தில் மலஹாலிகரேசுவர லிங்கமும், அன்னை பவானியும் குடிகொண்டுள்ளனர்.

இவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் 1985-ஆம் ஆண்டு பதினொன்றாம் தேதி பிப்ரவரி மாதம் நடைபெற்றது.

சிர்ங்கேரி மடத்தின் உள்ளே இருக்கும் கோயில்கள்

1. ஸ்ரீ சாரதை
2. சங்கர பகவத் பாதர்
3. வித்யாசங்கரர்
4. ஜனார்த்தன
5. அனுமன், கருடன், சங்கரர்
6. சக்தி கணபதி, வாகீஸ்வரி
7. இராமர்
8. ஹரிஹர
9. மலையாள பிரம்மா
10. சுப்ரமணியர்

எல்லைப்புற தேவதை ஆலயங்கள்

காலபைரவர் — கிழக்கே
துர்க்கை — தெற்கே
அனுமன் — மேற்கே
காளி — வடக்கே

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ சிர்ங்கேரி ஸ்ரீ சாரதாபீடத்தின்
சமீப கால பீடாதிபதிகள்

ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ரீ சிர்ங்கேரி சங்கராசார்யா
ஸ்ரீ ஸ்ரீ சச்சிதானந்த பாரதி
மகா சுவாமிகள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சிர்ங்கேரி சங்கராசார்ய ஸ்ரீ ஸ்ரீ உக்ர நரசிம்ம பாரதி மகா சுவாமிகள்

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சிர்ங்கேரி சங்கராசார்ய ஸ்ரீ ஸ்ரீ சிவாபிநவ நரசிம்ம பாரதி மகா சுவாமிகள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சிர்ங்கேரி சங்கராசார்ய
ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகர பாரதி மகா சுவாமிகள்

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மகா சங்நிதானம் ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மகா சுவாமிகளும்
சங்நிதானம் ஸ்ரீ பாரதி தீர்த்த சுவாமிகளும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



சிர்ங்கேரி ஸ்ரீ வித்யா சங்கரர் ஆலயம்

பிரதிகள் கிடைக்குமிடம் :

ஸ்ரீ சாரதா பீடம்

சிர்ங்கேரி : : கர்நாடகா

Sri Vidyabharathi Book Centre, Sringeri